Koviloor Digital Library

எந்நூலுக்கும் இந்நூலே மூலம்

பரஞ்ஜோதி

(நான்காவது அத்தியாயம்)

ஞானக்கண்

(ஏழாவது அத்தியாயம்)

ஞானவள்ளல்
பரஞ்ஜோதி மஹான்
அருளியது

பரிபூரண பரஞ்சோதியின்
உயர்ஞான சபையோரால்
வெளியிடப்பட்டது

KOVILOOR MADALAYAM
KOVILUR-630 307
MANAGIRI VIA

இரண்டாம் பதிப்பு

399

உரிமைப் பதிப்பு (ACT—XXI of 1860) JAN : 1946
(Copy Right Reserved)

Acc. No: 2383
R.65
0.60

Koviloor Digital Library

கவனிப்பு

உலக நல்லடியார்களே! பரிபூரண பரஞ்ஜோதியின் உயர் ஞான சபை, ஞான வள்ளல் பரஞ்ஜோதி மஹான் அவர்களால் மதுரையில் ஸ்தாபிக்கப்பெற்று, 1942௵ மேமீ 18உ 860 வருஷத்திய (Societies Act XXI) சட்டப்படி ரிஜிஸ்தர் செய்யப்பெற்றது. நன்மைக்கு ஆளாவோர் நாளுக்கு நாள் பெருகி, பல ஊர்களில் கிளைச் சபைகளும் ஏற்பட்டுள்ளன. சென்னையில் மூன்று சபைகளும், பம்பாயில் ஒரு சபையும், அருப்புக்கோட்டையில் இரு சபைகளும், பெரியகுளத்தில் ஒரு சபையும், சின்னாளப்பட்டியில் ஒருசபையும், இதுவரை நிறுவப்பெற்றுள்ளன.

தன்னைத்தான் அறிந்து, தன் சக்தியை அபிவிருத்தி செய்து, அன்றாட வாழ்க்கையில் பிரயோகித்து, பேரின்பமாய் பிறவியின் பெரும் நோக்கை முடித்து, ஐக்கிய முத்தியடைவது இச்சபையின் நோக்கம்.

“இருளே பூரணம்—உயிர் இருப்பது இருளில்—உயிராயிருப்பது நினைவு—உயிரின் ஒத்தாசையாயுள்ளது தன் தொனி—உயிரின் பொருளாயுள்ளது அக்கினி அல்லது ஜோதி—உயிரின் நிர்வாகி அறிவு—அடக்கமும் அணுவில் விரிந்ததும் அணுவால்—அறிந்ததும் அணுவினுள் ஆதி மெய்யுணர்வால்” என்பது இச் சபையின் தத்துவம்.

25 வயதிற்குமேல் 70 வயதுக்குட்பட்டவர்கள் பெரிதும் இல்லற வாசிகளாயும், திடகாத்திர மேனி உள்ளவராயும், சரீர தீங்கற்றவராயும் இருந்து, சபையின் 10 நிபந்தனைகளின்படி நடந்து கொள்பவர்கள் இச்சபையில் அங்கத்தினர்களாகச் சேரலாம்.

அறிவாளிகளே! அறிவைக்கடந்த, தன்னிலைபடைந்து கொள்ளுங்கள்.

நல்லடியார்களே! தன்னிலையடைந்து தன்னறிவைப் பிரகாசித்துக் கொள்ளுங்கள்.

சபையோரால்.

Koviloor Digital Library

345

M. A. A. Annamalai
PALLATHUR,
RAMNAD DT.

Koviloor Digital Library



ஞானவள்ளல் - பரஞ்ஜோதி மஹான்

Koviloor Digital Library

கோவிலூர் ஆதீனம் 321 2383 R65 கோவிலூர்-630 307

பரஞ்ஜோதி

ஞான வள்ளல் பரஞ்சோதி மஹான் அவர்கள் அருளிச்செய்த பிரசங்கப் பொன் மொழிகள்

1. ஆதியும், அகண்ட இருளும், அதுவின் தொனியும், அருட்பெருஞ் ஜோதியும் அணுவில் ஒடுங்கி, அணுவாய்ப் பிரிந்து, அகில லோகங்களாய் நிறைந்ததின் பின்; ஆதியால் அகண்ட இருளில் அணுவைத் தரித்து, அணுவைத் துளைத்து; அதில் உருவானது நாம்.

ஜோதியின் தத்துவம்

2. ஜோதி சொரூபமென்பது அக்கினி சொரூமே, நினைப்பின் சொரூபமும், நினைப்பின் பீடமும், மகா காரண மென்பதும, அளவிட முடியாத ரூபமென்பதும் அதுவே. பரிசுத்த வெண்மையாயுள்ளதும், வித்தாய் விளைந்ததும், வித்தாயுள்ளதும், எல்லா ஜீவாத்மாக்களுக்கும் இசைந்து, அந்தந்த ஆத்மாக்களுக்குரிய வித்தாய் விளைந்ததும், விளைவதும் அதுவே. இருளில் வெளிச்சமாய் இருப்பதும், இருளில் நிழலாயுள்ளதும், சாயையாயுள்ளதும், தேஜஸுக்குரியதும், எல்லாஜீவனுக்குள்ளுள்ள பொருளும், உயிருக்கு ஆதரவாய் உள் பொருளாயுள்ளதும், சுக துக்கத்திற்குக் காரணமாயுள்ளதும் அதுவே. உருவ தோற்றங்களுக்கு மூல நினைப்பின் உருவமாயுள்ளதும், கருவாயுள்ளதும், குருவாயுள்ளதும், அணுவாய் பிரிந்ததும், அணுவில் உள்ளதும், பிரிந்தும் அளவில் குறையாததும் அதுவே. இது வரையும், இனியும் அழியாததும், பின் அணுவின் முடிவாயுள்ள இடமும், நமது ஜோதி சொரூபமே சொரூபம். (இது அரூப, ரூப இரண்டு நிலைகளையுமுடையது.)

Koviloor Digital Library

மகா காரண லோகம்

3. அக்கினி சொரூபமான ஜோதி சொரூபம் தான் மகா காரண லோகம் என்று சொல்லப்பட்டது. இந்த மகா காரணம் என்பது ஆயிரத்தெட்டு மல ருக்கு அடிப் படையாயுள்ளது. இதற்கு மூலம் நினைப்பே. நினைப்பிற்கு உருவம் அக்கினி சொரூபமே. இந்த நமது சொரூபம் ஏக சக்தி நிறைந்தது. மேலும், இதுவரை பரம ஜீவ ஆத்ம உருவ அணுக்களாயும், மற்ற உருவ அணுக்களாயும், அணுக்களாய் உருவம் ஆகாத சக்தியும், அணுக்களாகி ரூபம் அழியும், சக்தி யும், பரம ஜீவ ஆத்ம அணுக்களாய் இருக்கும் சக்தியும், மற்றும் அணுக்களாயுள்ள சக்தியும், இனி, பரம ஜீவ ஆத்ம அணுக்களாயும், மற்ற அணுக்களாயும் ஆகக் கூடிய சக்தியும், இருக்கும் இருப்பிடம் இந்த மகா கார ணம் என்னும் நமது ஜோதி சொரூபமே. பரம ஜீவ ஆத்ம அணுவாயுள்ள மனிதரூபங்கள், காரண லோகம் சூக்கும தேவர்கள் லோகம், சரீர லோகங்களுக்கு வந்து, அனேக பிறவிகள் எடுத்து, தன் அனுபவங்கள் எல்லாம் முடித்து, அதிலேயே பக்தர், சித்தர், முக்தர் பதவியின் எல்லா வேலைகளையும் தவத்தின் செல்வத் தால் யாதொரு குறைவும் இல்லாமல் அறிவின் விருத் தியால் முடித்து, ஆயிரத்தெட்டு மலரையும் தாண்டி, அக்கினி சொரூபத்தோடு ரூபம் கலந்து, தன் ஆதி யோடு தான் சேர்ந்துகொள்ளுகிறது. இதற்கு ஜீவ ரூப ஐக்கிய முக்தி எனப்படும். இந்த ஜீவ ரூப ஐக் கிய முத்தி அடைந்தவரின் ரூபமோ, பெயரோ அன்றே அழிந்தது. நம்முடைய சபையின் மெய் யுணர்வாளர்கள் அடையும் ஐக்கிய முத்தி, இதுவே யாகும்.

4. அண்டம் பூத்து, அருள் பூத்து, அண்டமும் பிண்டமும் நிறைந்த ஒரு மொழியும் பூத்து, ஆக்ஞை-யாகிய இடமும் பூத்து, மதி பூத்து, கம்பமும் காரண மயிர்ப் பாலமும் பூத்து, அருளொடு நிறைந்த கருவும்

Koviloor Digital Library

பூத்து, கனமான மெய்யுணர்வும் பூத்து, கபாலமும் பூத்து, கருணைக்குரிய கண்ணின் கண்மணியாயுள்ள கருமணியின் உள்ளுள்ள மாமணியும் பூத்து கருத்துக் கிசைந்த சூக்குமகாரணமும், பூத்து, குறையில்லாக் குணங்கள்பூத்து, நிறைவெல்லாம் நிறைவாக நிறைந்ததின் பின், கடமாகிய இடமாய் இணைந்துள்ள ஸ்தால பஞ்சபூத அணுக்களும் பூத்து, அன்போடு, அருளோடு, அலையோடு அலையாய் அருட்பெருஞ் ஜோதியினுட் புகுந்து, பூத்தவடிவாய், அங்கிங்கெனுதபடி எங்குமாய் ஏகமாய் இரண்டறக் கலப்போம். கலப்பீர். கருத்துவடிவாகிய நான்-நாம்.

5. அன்புமயமும், அருள் மயமும், பொருள் மயமும், கருவின் கருமயமும், கடத்தின் மயமும், அன்னமயமென்றறி.

6. அன்ன மயமும் அன்பு மயமும் அருளிய சொல்லில் அருளோடு அருளாய் கருத்தினுள் கருத்தாய் நின்ற கனமுடையோர் கரு தவமுடையோர் காரணத்தின் கண் கொண்டு அறிந்த அருட்பெருஞ் ஜோதி மயமே.

7. ஜோதியும் சொரூபமும் சும்மாயிருந்த நம்மின் மயம் தான்.

8. நம் உணர்வால் கண்டுபிடிக்கப்பட்ட பாக்கியந்தான் இருள். இருள்தான் எங்கும் நிறைந்திருக்கிறது. இருள் இல்லையேல் நிர்வாகம் இல்லை. நிர்வாகம் இல்லையேல் உலகமில்லை. இருளைப்பற்றிப் பேசுவது அறிவு ஆகையால் இருளே பரிபூரணம்.

9. இருளிலுள்ளது ஆதி. ஆதி என்பது நினைவு. இந்த ஆதி அல்லது நினைவு என்ற உயிர், தனது நாதத்தால் அதாவது தன்னுள் இருக்கும் ஓங்கார சப்தத்தால் விழிப்படைந்தது. இதற்கு தன்னேடு ஒத்தாசையாயிருப்பது தன் நாதம்.

Koviloor Digital Library

10. ஆனதால் எவ்வுயிரும், எவ்வுலகும், எப்பொருளிலும் இருள் நிறைந்தது; ஆதி நிறைந்தது: நாதம் நிறைந்தது: ஜோதியும் நிறைந்ததுதான்.

11. அரூப ரூப முழக்கமே மாபெரும் உலகங்களாய் பரிணமித்ததும், அணுக்களாய் பிரிந்ததும் ஜோதியிலிருந்தே. ஜோதி என்பது மரியாதை மிகுந்த சொல். அதையே அக்கினி, நெருப்பு, ஒளி என்றும் கூறலாம்;

12. இருளில் கிடந்த ஆதி என்ற அரூப ரூப நினைப்பு, தன் நாதத்தால்ஏங்கி ஏங்கிநினைக்க, அந்த மாபெரு ஏக்கமே அக்கினியாயிற்று. ஆதியினது ஏக்கம் அதிகரிக்க அதிகரிக்க ஜோதியாக மாறியது. இந்த ஜோதியையே மகாகாரண லோகமென்றும், அழியாததென்றும், ஒரு சிலரால் கடவுளென்றும், பிர்மமென்றும், அண்ட மென்றும் கூறப்படுகிறது. நமது நினைப்பின் வேகமே ஜோதியாய் பரிணமித்தது. ஜோதியிலிருந்தே அணுக்கள் பிறந்தன, பறந்தன.

13. அந்தந்த அறிவிற்குத் தக்கவாறு இசைந்து கூடி, விளைந்த வஸ்துவே பரிசுத்த ஜோதி. ஒரு சிறு பெரும் ஏக்கத்தின் வேகமே இவ்வளவு பெரிய ஜோதியாயிற்று. ஜோதியே விந்து; விந்துவே ஜோதி வடிவு. விந்து, ஜோதி இரண்டும் ஒன்றே.

14. ஒவ்வொரு குணங்களும் தத்தம் இயக்கத்திற்கிசைய விளைவித்து வைத்திருக்கும் ஜோதிப்பொருளை அனுபவிக்கவே அரசாங்கமும், அதற்குரிய பாதுகாப்பும் உண்டாக்கப்பட்டிருக்கின்றன. இதை நன்ருக அறிவோடு அனுபவிப்பதற்காகவும், அது பெரும் சிரமம் இல்லாமல் கிடைக்கும் பொருட்டாகவும், சரியை, கிரியை, வணக்கங்கள் கைக்கொள்ளப் பட்டு வருகின்றன. மற்ருெரு வகையில் அறிவோடு அனுபவித்துவிட்டு, பின் அருட்பெருஞ் ஜோதிக்கு

Koviloor Digital Library

அப்பாலுக்கப்பால் செல்லவேண்டிய முயற்சிக்கு இச்சரியை, கிரியை யோகங்கள் பாடுபடுகின்றன.

15. இந்த உலக ரூபாரூபங்களெல்லாம் ஜோதி சொரூபமே. இதற்கு உதாரணம் கூறுமிடத்து ஒவ்வொரு விளைந்த வித்திலும், மேல் மாசாகிய தோலை நீக்கினால் உள்ளே தூய வெள்ளை வஸ்துவாக விளங்கிருப்பது ஜோதியே.

16. தகப்பனின் ஒரு சிறு அணுப்பிரமாணமான விந்துவின் உற்பத்தியே இச்சரீரம். இச் சரீரத்தில் அமைந்துள்ள ஐம்புலன்களின் சேட்டைகளாகிய காம, குரோத, லோப, மத, மாச்சரியம் என்னும் மாசுகளை நீக்கி, ஓர் மொழியின் நியதிப்படி, ஒப்பற்ற ஓர் தனிப் பெரும் நெறியில் வழுவாது நின்றால் ஒவ்வொருவரும் தன் சரீரத்திலுள்ள பரிசுத்தமான பரஞ்ஜோதிப் பொருளைக் கண்கூடாகக் காணலாம். இது முக்காலும் உண்மை.

17. தகப்பனின் ஒரு சிறு அணுப்பிரமாண விந்துவாகப் பட்டது, தாயின் இருட்டறையாகிய கருக் குழியில் தங்கினதும், பெண்ணின் நாதவேக வெப்பின் இரத்தமானது* அத்துடன் கலந்து ஒரு சிறு ரோம அளவில் நேரான கோடாக நீண்டு, அந்த கோட்டின் முடிவில் விளைந்த விந்துவை உச்சியாக வைத்து, அதிலிருந்து உருவ ஸ்தூல அணுக்களைச் சேர்த்து, தனக்கு வேண்டிய அவயவங்களைச் சித்தரித்துக்கொள்ளுகிறது. முதலில் தரித்த இடம் உந்தியாயும், கோடு முடிந்த இடம் உச்சியாயும் இருந்து உரு

* (1) பெண் ரூபத்தில் நாதம் வியாபகமாய் உள்ளதால் ஆசைக்குரியவள். சரீர அணுக்களின் சேர்க்கை மிருதுவாய் உள்ளது.

(2) ஆண் ரூபத்தில் நாத விளைவே அமர்ந்து விந்தாய் விளைகின்றது. இவன் நிதான தன்மைக்குரியவன்.

Koviloor Digital Library

வாகிறது. உருவாகி பிறந்த பின், அக் குழந்தையின் சிரசிலேயே சுமார் 11 அல்லது 13 வயது வரை விந்து வானது வெண்ணிறமாய் பரவி விளைவாகிறது. 13 வயதுக்கு மேற்பட்டு முன் தரித்த தன் இடத்திற்கே இறங்கி வந்துவிடுகிறது. அது இறங்கிய பின்தான் அதின் விளைவு துரிதமாகிறது. அந்த விளைவின் அதிகரிப்புக்குப்பின்தான் விந்து ஸ்கலிதமாகிறது.

18. இந்த விந்துவானது மறுபடியும் உச்சிக்குச் செல்வது மனிதனுடைய மரணத்தருவாயில்தான். இந்த விந்துவாகப் பட்டது இரண்டாவது ஸ்தான மான சிரசிற்குச் செல்வதற்குத்தான் மரண அவஸ்தை ஏற்படுகிறது. இந்த சமயத்தில் ஏதோ தன்னுடைய கஷ்டத்தால் தனக்கே தெரியாமல் நெற்றிக் கண் அரு கில் கரு வந்தவுடன் சோம வட்டம் தெரிந்து, நெற் றிக் கண்ணை கரு தொட்டவுடனேயே ஒரு பேரா னந்த ஜொலிப்பும், நரம்புகளின் இன்ப சிலுசிலிர்ப்பும் உண்டாகின்றன. இதனுல் விந்து ஸ்கலிதமாகி, சூக்கு மமும், அறிவும் உடலை விட்டு பிரிந்து விடுகின்றன. இதற்குத்தான் மரணம் என்று சொல்வது. 13 வய துக்குட்பட்ட குழந்தைகள் மரணித்தால் அந்த விந்து விளைவில்லாததால் கண் வழியோ, காது வழியோ, மற்ற எந்த வழியாகவேனும் உயிர் போய்விடுகிறது. அவர்களுக்கு விந்து ஸ்கலிதம் ஆவதில்லை. ஏனென் ருல் விளைவில்லாததால் தான். விந்துவின் ஸ்தானம் குடிலையாகும். குடிலையை உந்தி என்றும் சொல்ல லாம். ஆனுல் சரீரத்திலுள்ள நாபிக்கு உந்தி என்று சொல்லக்கூடாது; இந்த விந்துவாகப்பட்டது சரீரம் பூராவுமே வியாபித்து இருக்கிறது. ஆனுல் அத னுடைய சுய இருப்பிடம் 13 வயது வரை சிரசும், அதற்குமேல் குடிலையுமாகும்.

19. ஜோதி அல்லது விந்து இல்லையேல் தேஜஸ் இல்லை; உபதேசமும் இல்லை. உபதேசமில்லையேல், உய்யும் வழியுமில்லை. பிறந்து பிறந்து இறக்கவேண்

Koviloor Digital Library

5-6

டியதே யொழிய, பிறவியின் பெரு முடிப்பு அறுபடுவ தில்லை. பிறந்து, பிறந்து இறந்து இறந்து தளர்வடைய வேண்டியதுதான். ஜோதி இல்லையேல் ஒன்றுமே இல்லை. எப்பொருளுமே இல்லவே இல்லை.

20. கருவென்பது ஜோதியின் விளைவு. கடத்தில் ஒரு சிறு இடத்தில் அதாவது ஒப்புயர்வற்ற ஓர் தனி இடத்தில் கரு தரித்தால்தான் ஞானி என்றும், அறிவாளி என்றும் பெயர்.

21. கருவின் பீடம் மூலம். நினைவு என்பது அக்கினி சொரூபத்தின் குரு. எல்லா நிர்வாகங்களுக்கும் ஜோதி தேவை. அணுவில் பரந்த இருள், ஆதி, நாதம், ஜோதி, குணம் ஆகிய ஐந்தும் ஒன்றறக் கலந்திருக்கின்றன.

22. தரிசில் விதைத்த வித்து நல்வித்தானுல், தருணத்தில் உதவும் தான்.

23. உருக்கிரும்பை, உருக்கத்தால் உருக்கி உருக்கி, உருவாக்கி, உழுதிட்டு, உள் விதைத்த வித்து உண்மை வித்தே கருவாகும். கருவின் கனமே உணர்வாகும். உணர்வின் பொருளை உச்சியில் உணர்ந்தோர்க்கு, ஒரு குறைவும் ஒருபோதும் இல்லவே இல்லை.

மெய்யுணர்வாளர்களே! ஞாபகம் இருக்கட்டும்.

குண்டலி சக்தி.

24. இது கருவும் நினைவும் சேர்ந்தது. இதனுடைய இருப்பிடம் மூலாதாரம். இந்த குண்டலி சக்தியை ஆருதார வழியாக ஆக்கினை ஸ்தானம் கடத்த முடியாது. ஆருதாரம் என்ற அர்த்தமே வேறு. அதைக் கடத்தும் வழியும் வேறு. மெய்யுணர்வாளர்களுக்கு இது தேகத்தில் நாக்குப் பூச்சி போன்று அதினுடைய வழியில் செல்வது அறிவில் தெரியவரும்.

Koviloor Digital Library

25. குண்டலி சக்தியின் சூக்குமம் நம் கண் தோற்றத்தில் பார்ப்பதென்ருல், கண்ணுக்கு நேரே ஒரு கெஜ தூரத்தில் ஒரு நாக்குப் பூச்சி அளவில் சிறு வளைவுகளும், சிறு கால்களைப் போன்ற கிளைகளும் $3\frac{1}{2}$ அங்குலம் முதல் 4 அங்குல நீளத்தில் ஒன்று அல்லது இரண்டு தெரியவரும். இதில் சில பிரகாச அணுக்கள் கசகசா அளவில் இணைந்திருப்பதையும் பார்க்கலாம். இது ஒரே நிலையாய் நிலைத்து நிற்காது. மேல் நோக்கி சென்று கொண்டே இருக்கும். தோன்றுவதும் பின் மறைவதும் இதன் சகஜம். பக்தர்கள் யாவரும் இதைப் பார்க்கலாம். இது அரூப தோற்றமே அல்லாது ரூப தோற்றமாகாது. ரூபத்திலுள்ள குண்டலி சக்தியைப் பார்ப்பதென்பது ஞானிகளாகிய மெய்யுணர்வாளர்களுக்குரியது. இதன் விபரம் உணர்வு பிரசங்கத்தில் பார்க்கவும்.

ரசமணி.

26. நெற்றிக்கண் திறந்து, கரு உச்சிக்கு ஏறி, நாள் செல்லச் செல்ல ஒரு சிறு ஆமணக்கு வித்தைப் போன்று அது உருளுவது அறிவிற்கு உணர்ச்சியாய் தெரியவரும். இதை சிலர் கருநெல்லி என்றும் சொல்லிக் கொள்வார்கள். ஏனென்ருல், தவம் அதிகரித்தால் கருவிழி பருமனுய் உருண்டு தெரிவதுமுண்டு. இதுவும் நெற்றிக்கண் திறந்து சென்ற கருவின் விளைவேயாகும். விளைவிக்கும் தந்திரம் தெரிந்தவர்களுக்குத் தான் ரசமணியின் நுட்பம் தெரியும். இவர்களுக்கு மரண பயமோ, மரண அவஸ்தையோ இல்லை.

27. சிலர் பாதரசத்தை வாங்கி அதற்கு வேண்டிய மூலிகைகளைச் சேர்த்து, ரசத்தை மணியாகக் கட்டி விட்டால், நினைத்தது பலிக்கும், இரும்பை தங்கம் ஆக்கிவிடலாம் என்று, பெரும் ஆசையால் தங்கள் பொருளைச் செலவழித்துக் கொள்ளுகிருர்கள். அப்படி

Koviloor Digital Library

ரசமே மணியாகிவிட்டாலும், அப்படி ஒன்றுமே ஆவதில்லை.

28. இந்த சக்தி எல்லாம் 25 வயதுக்கு மேற்பட்டுத்தான் உண்டாகிறது. நூல் அறிவில் இவ்வளவு தெரிந்துகொண்டால் போதுமானது. அனுபவத்திலறிய வேண்டுமென்றால் இச்சபையில் சேர்ந்து, முழு விபரம் தெரிந்துகொள்ளவும்.

அறிவினுடைய அனுபவமும், சாமர்த்தியமும்.

29. அறிவானது ஓரறிவிலிருந்து ஆறறிவுவரையும் வர, வெகு காலம் கல்பமாக சுழன்று, சுற்றி, அனுபவித்து வருகிறது. ஒவ்வொரு கல்பத்தின் சுற்றின் சுழலால் ஓரறிவிலுள்ள ஜோதிப் பொருளைப் படிப் படியாக உயர்த்தி, ஆறுவது அறிவாகிய மனித ஸ்தூலத்தில் வந்து விந்துவாய் முடிகிறது. அறிவின் சுற்றின் சுழலையும், அதினுடைய அனுபவத்தையும் மிக நுட்பத்திலும் வெகு நுட்பமாக ஆராய்ந்து கவனிக்கும்போது எவ்வளவோ கால அளவு சொல்ல முடியாத சொல்லுக்குள் உள்ளது. அந்த கால அளவு நிர்ணயித்ததை எழுதியும் விடலாம். அதை எழுதவும் கூடாது. பெரும் ஆராய்ச்சியின் அறிவாளிகள் மிக நுட்பமான சிந்தனையில் இருந்து இதை ஆராய்க.

30. என்ன படித்திருந்தாலும், அநேக கலைகளை அறிந்த கலை ஞானியாக இருந்தாலும், கருவின் நிலையறிந்து பார்க்கவேண்டும். நுட்பத்திலும் நுட்பமாக அறிவின் உள்ளும் புறமும் நிறைந்துள்ளது கரு.

31. அறிவின் குறைவால், அறிவுதான் பிறவி எடுக்கிறது. அறிவு பிறவி எடுத்தாலும், அறிவின் குறையைப் பூர்த்தி செய்ய ஆத்மா வந்து சேருகிறது. ஆத்மா, தனதாற்றலின் நிர்வாகம் பூராவும் அறிவினிடம் ஒப்படைக்கின்றது. அறிவானது நிர்வாகம் ஏற்றுக்கொண்டதும், ஆத்மாவை ஆக்கினைக்குட்படுத்துகிறது.

Koviloor Digital Library

32. அணுவணுவாய், அறிவறிவாய், அறிவின் பிரிவும், அறிவின் முடிவும், ஆனதொரு சுழலின் வேகமும், ஆயிரத்தெட்டு மலரால் என்று அறிந்தீர்.

33. வேகுகின்ற செஞ்சுடரும், வெண்ணிற வெளிச்சமும், அப்பாய், பின் வெப்பாய், உப்பாய் உறைந்த உலகத்தில், வித்தாய் விளைந்து, வித்துக்குள் உள்ளுள்ள வெள்ளைப் பொருளாயும், பின் விந்துவாய் உள்ள கருவும், அருட்பெருஞ் ஜோதியே என்றறியுங்கள்.

34. ஆத்மாவானது நமது கண்ணிலுள்ள கருவிழிகளின் மத்தியிலுள்ள சிறு புள்ளியின் பருமனுள்ளது. அதாவது ஜலத்தில் ஊறிய சப்ஜா விதை பருமனுள்ளது. இதுதான் பரம ஜீவாத்மா எனப்படும். ஜீவனின் கண், அறிவு. அறிவின் கண் ஐம்புலன்கள. இக் கண்ணால் கண்டு, அக் கண்ணால் முடிவு கட்டவேண்டும். அறிவு பெரும் நுட்பம் அடைந்ததும் ஞானக் கண் என்று பெயர் பெறும். அறிவினால் நுட்பமாக கவனித்தால் ஞானக்கண் விளங்க ஏதுவாகும்.

*   *   *

பிறவிக்கு முன்னும் பின்னும்.

35. இணையற்றிருந்தேன், இருந்திருந்து இனியேது செய்வதென்றேங்கினேன், ஏங்கியேங்கிப் பறந்தேன், பறந்து பறந்து விரைந்தேன், விரைந்து விரைந்து வளர்ந்தேன், வளர்ந்து வளர்ந்து பிறந்தேன், பிறந்து பிறந்து எனையான் மறந்தேன், மறந்து மறந்து இறந்தேன், இறந்திறந்து இப்பிறவியில் பிறந்தேன், இனி என்னை அறிவதற்கு ஏங்கினேன், ஏங்கி யேங்கி ஏக்கக்கனலால் வாடினேன், வாடி வாடி அருள் நீர் சொரிந்தேன், இரவு பகல் விழித்தேன், ஏதேதோ செய்து முடித்தேன், முடித்ததின் பயனால் அன்புக்குரிய அன்பனையடைந்தேன், அடைந்து என்னுள்,

Koviloor Digital Library

நான் அமர்ந்தேன், அமர்ந்தமர்ந்து ஞான மெய்யுணர்வு அடைந்தேன், அடைந்த உணர்வை அண்டியண்டி அறிவால் அறிந்தேன், அறிந்தறிந்து தெளிந்தேன், தெளிந்து தெளிந்து தேர்ந்ததை உணர்ந்த அன்புக்குரிய அன்பனுல் இப்பதவி பெற்றேன், பெற்றதும் வாரி வாரிக் கொடுத்தேன், கொடுக்கின்றேன், இனியும் கொடுப்பேன், கொடுத்து மொழிந்தேன், மொழிகின்றேன், மொழிந்து மொழிந்து சுகித்தேன், சுகிக்கின்றேன், சுகிப்பேன், சுகித்ததின் பலன், இணையற்றயானே என் மயமானேன்.

* * *

36. மெய்யுணர்வாளர்களே! அன்பும் அறிவும் இன்பமாய் கொண்டீர்கள். அருள் மழை பெய்து, பொருள் மலை விளைந்து, அனுபோக மாலை அணிந்து பூதலமீது புகழோங்கி, புண்ணிய மண்டலமும் கடந்தது நம் பூரணமே. பரிபூரணமாய் உள்ளே நாமே நாமாவோம்.

ஒவ்வொருவரும் மிக முக்கியமாக அனுஷ்டிக்கவேண்டிய முறைகளாவன :-

37. (1) சாப்பிடும்போதும், (2) தூங்கும் போதும், (3) மலஜலம் கழிக்கும் போதும், (4) நன்மையான ஆராய்ச்சியில் இருக்கும் போதும், (5) தன் மனைவி மக்களுடன் சந்தோஷமாக இருக்கும்போதும், (6) தவத்தில் இருக்கும் போதும், மெய்யுணர்வாளர்கள் கவலை, சந்தோஷக் குறைவு, மனக்கஷ்டம், பயம், இல்லாமல் இருந்து கொள்ளவேண்டும். இப்படி ஒரு மாத காலம் பழக்கப்படுத்திக் கொண்டீர்களானுல் சகலமும் உங்களுக்கு அனுசரணையாகவே நடந்தேறும். அப்போது ஒவ்வொன்றையும் பூரணமாய் அனுபவித்து முடித்தவர்கள் ஆவீர்கள்.

38. அறிவைக் கருவால் துளைத்து அதில் நின்று பார்த்தால், அதனுல் ஏற்படும் ஆனந்தம் சொல்ல

Koviloor Digital Library

முடியாத சொல்லுக்குரியது. அதுவே பேரானந்தம்— பேரின்பம் எனப்படும்.

39. அறிவு தெளிந்து தெளிந்து, பின்னும் துலக்கமற தெளிந்து, அறிந்துகொள்வதுதான் ஞானம்.

மெய்யுணர்வாளர்களின் தர்ம உயர்வு

40. உலகில் நீங்கள் கண்ணியமான நடை, உடை, சொல், பார்வை, பெருந்தன்மை, தைரியம் கொள்வதுடன், பிறர் குற்றத்தை அனுசரியாமல் எப்போதும் சந்தோஷமாய் இருந்துகொள்ளுங்கள்.

குற்றம் உண்டா? உண்டு. எதுவரை?

41. நாவில் சுவை உள்ள வரையும், உடம்பில் இரத்தம் உள்ள வரையும், நாலு விரற்கடைத் துணி சரீரத்தை மறைக்கும் வரையும், இனம் தெரியும் வரையும் குற்றம் உண்டு.

42. நாவில் ஒரு சிறு நோவிருந்தபோது, நல்ல ருசி அறியாதது போல், பிறரது துவேஷம் சிறிதளவு இருந்தாலும் பேரறிவுக்காளாகமாட்டார்.

43. கண், காதால், கண்டு, கேட்டு, கொண்ட மாய்கைதனை, கண், காதால் இனி கண்டு, கேட்டு, அறிந்து விட்டொழியுங்கள்.

44. நடந்து, ஓடி, சுமப்பதும், ஆடுவதும், பாடுவதும், படிப்பதும், நுட்ப நூதன பற்பல அறிவினை, சமர்த்தின் சமர்த்தால் சாமார்த்திய வேலைகள் செய்வதும், நாடெல்லாம் கடலேறி சம்பாதிப்பதும் எதற்கென்றால்: களைப்பை நீக்கி, உல்லாசமாய் இருந்து, பற்பல குணங்களுக்கிணங்கிய காய்கனிகளாகிய ஜோதியின் வெப்பின் சுவைகளையும், வித்தாய் விளைந்த ஜோதிப் பொருளையும் சுகிப்பதற்கே.

Koviloor Digital Library

45. பிச்சை எடுப்பதும், பிதற்றுதல் செய்வதும், பேராசை கொள்வதும், ஆணவம் கொள்வதும் எதற்கு? இந்த ஜோதியின் பொருளை அனுபவிப்பதற்கே.

46. பணிவு, ஆதரிப்பு, பொறுமை, பெருந்தன்மை, இவையெல்லாம் எதற்கென்றால்: நிதானத்திற்குத் தக்கவாறு, ஜோதிப் பொருளை, வாங்க, கொடுக்க, அனுபவிப்பதற்காகவே.

47. ஜோதிப் பொருளை அந்தந்த அளவில் ஒவ்வொருவரும் அனுபவிப்பதற்கு வேண்டி நீதிக்குரியது இராஜாங்கம்.

48. உலக நல்லடியார்களே! நீங்கள் நல்ல சுவையாய் சாப்பிட்டு சந்தோஷமாய் இருக்கும்போது நல்லடியார்களை நினைப்பதுடன் ஒரு பொல்லாத குணமுடையவனையும், அவன் நல்லறிவுக்காளாக வேண்டுமென்று நினைத்துக் கொள்ளுங்கள். அப்போது அவன் நல்லறிவுக்காளாகிறான்.

49. ஒரு, சிறு, இரு, கண் புள்ளிகளால் நாலு கோடி அடி சமவெளி தெரிவதுபோல், குருசொல் ஒருசொல்லுக் கிணங்கினீர்களானால் சமயகோடானு கோடி நூல்களெல்லாம் தன்னறிவில் தெரியலாமே.

50. எவனொருவன் தன் மதத்தில் ஒழுக்கமுடையவனோ, அவன், பிறமதத்தைக் குறைசொல்லாதவனாவான்.

51. எமது மெய்யுணர்வாளர்களே! நீங்கள் பெரும் ஒற்றுமைக் குரியவர்கள். அவ்வொற்றுமையைப் போல் என்றென்றைக்கும் ஏகமனதாய் இருக்கவேண்டும். இருப்பீர்கள். நீங்கள் அடைந்திருக்கும் சத்திய மெய்யுணர்வை என் சரீரம் ஒன்றிலிருந்தே தெரிந்துகொண்டீர்கள். இனியும் பலர் தெரிந்து கொள்ளப்போகிறார்கள். இச்சரீரமோ பல

Koviloor Digital Library

கோடானுகோடி அணுக்களின் ஒற்றுமை என்பது தெரியவரட்டும். அநேக கோடானுகோடி ஆத்மாக்களுக்குரியது ஒரு சத்தியமும், அதன் தத்துவமும். என் இருதய மலர்களே! உங்களுடைய ஒற்றுமையே என்னுடைய சரீரத்திலுள்ள சத்தியத்தைப் பாது காப்பதாகும். உங்களுடைய சந்தோஷமே என்னுடைய ஆனந்த அனுபவமாகும். உங்களுடைய அறிவின் பூரணமே என்னுடைய சுய ஐக்கியமாகும். உங்கள் அருள் முக சந்தோஷ செழிப்பு என்றென்றைக்கும் மாறுதிருக்கும். இது நிச்சயம். ஆகையால் என் பெரும் சந்தோஷ சிறப்புடன் இன்று பிரசங்கம் இனிது முடிவுற்றது.

(இது தத்துவங்களில் நான்காவது தத்துவமாகும்)

Koviloor Digital Library

ஏழாவது அத்தியாயம்

ஞானக்கண்

நெற்றிக்கு நேருள் நின்றதும்
நேரான உட்பாறை யுடைத்ததும்
நெருப்பாறு மயிர்பாலங் கடந்ததும்
நெஞ்சில்யமவாதை நீக்கியதும் நாமேநாம்.

நெற்றிக் கண்

1. இந்தக்கண் இருக்குமிடம், இரண்டு கண்களுக்கும், மூக்கு சுழிமுனைக்கும், புருவ இடை நடு ஸ்தானமாகும். இந்த இடத்தில் சிறு ஊசித் துவாரத்தின் பத்தில் ஒரு பாகம்தான் இந்தக் கண்ணின் அளவு இருக்கிறது. அதுவும் மிக நுட்பத்திலும் மிக நுட்பமாயிருக்கிறது.

2. இந்தக்கண்ணைத் திறப்பதென்றால் அறிவோடு கருவும் நினைவுங் கலந்தால்தான் முடியும். மேலும் இதையறிந்த குருபதவியடைந்த குருவினுடைய சாமர்த்தியமும் இருந்தால்தான் முடியும்,

3. இந்தக்கண் திறந்திருந்தால் அறிவுக்கு நன்றாய்த் தெரியலாகும். இதை வாசி என்ற மூச்சு அப்பியாசத்தாலோ மற்ற யோகங்களாலோ திறந்துவிட முடியாது. ஆயினும் அவைகள் அதனைத் திறக்கக்கூடிய முயற்சிகளை அதிக சிரமத்தோடு செய்கின்றன. அந்த அளவில் அவர்கள்மீது மிக சந்தோஷமடைய வேண்டியதுதான். எவ்வளவு முயன்றாலும் அவ்வப்பியாசங்களால் அதனைத் திறக்க முடியாது.

Koviloor Digital Library

திறக்கும் திறமை

4. கண் இரண்டிலும் கடந்தகண் ஞானக்கண், அக்கண் முக்கண், முக்கண்ணின் முகப்பும், முனை எழுத்தால் மூக்கி, அருகு நுனிவழியாய் கருஏறி வந்திருந்து அதைத் திறந்ததின்பின் அதனுட் புகுந்து போய் இருப்பது எதுவோ அதுவே;முத்திக்கு வித்தாகியதும் முன்னமே ஆதியாயுள்ளதுமான மௌன மெய்யுணர்வாம்.

5. இந்தக் கண்ணானது அணுவிலும் மிகச் சிறியதாக இருந்திட்டபோதிலும் அதுவே உலகங்களை எல்லாம் நிர்வாகம் நடத்தும் இராஜனின் சிம்மாசனமாகும். அச்சிம்மாசனத்தின் வாசலானது மிக மிக லேசான ஜவ்வினால் மூடப்பட்டுள்ளது. ஆனதால் தான் முக்கண்ணின் முகப்பும் முனை எழுத்தால் மூக்கி என்று சொல்லியிருக்கிறேன். ஆயினும் பலாத்காரத்தினால் அதனைத் திறந்துவிட முடியாது. பலாத்கார முறையில் யோகங்கள் செய்யும் வைராக்கியர்களின் ஆசாபாசங்கள் அடங்கி, துற்குணங்கள் எல்லாம் விட்டு நல்லவர்களின் நிலைக்கு வரக்கூடிய நிலைமையை ஏற்படுத்திவிடுகிறது. ஆகையால் இவர்கள் நல்லவர்களிலும் மிக நல்லவர்கள் ஆவார்கள். ஜோதியாகிய கருவும் நினைவாகிய இராஜனும் கலந்தால் தான் இதைத் திறக்க முடியும். இதற்கும் வயது 25-க்கு மேல்தான் சரியான பக்குவமாகும். தன் சுய முயற்சியாலோ நூல் அறிவாலோ அதனைத் திறந்துவிட முடியாது. அப்படி முயற்சித்தாலும் முயற்சித்தவர்கள் பெருங் கஷ்டத்திற்கு ஆளாவார்கள். இதன் விபரம் பின்வரும் உச்சிக்கண்ணில் பார்க்கவும்.

6. இந்த கண் திறவாதபடி யாரும் முத்தியடைந்ததும் இல்லை, அடையவும் முடியாது. முத்திக்கு இது ஒரு முதல் வாசலேயாகும்.

Koviloor Digital Library

7. இந்த ஸ்தானம் குருநாடியின் முகப்பாகும். இந்த நாடிக்கு கட்டுப்பட்டுத்தான் சரீரத்திலுள்ள எல்லா நாடி நரம்புகளுமுள்ளன. பார்வை பிறப்பதும், சொல் பிறப்பதும், கேள்வி அறிவதும், சுவை தெரிவதும், ஞானிகளுக்கு இங்கே தான். மற்றதெல்லாம் பிறப்பதும் இங்கிருந்தே. ஆராய்ச்சிகளும், நுட்பத்திலும் நுட்பமான நூதனங்கள் அறிவுசெய்து முடித்ததும் முடிப்பதும் இங்கிருந்தே.

8. இந்த ஸ்தானத்தில் தான் புத்தி உதயமாகிறது. புத்தி என்ருல் சிறு அறிவுக்கும் பேரறிவுக்கும் இடையிலுள்ள சிந்தனை என்றும் ஆராய்ச்சி என்றும் சொல்லலாம். இது மனதை அடக்கவும் விரிக்கவும் வல்லது. நன்மை தின்மை அறிவதும், தன் குற்றத்தைத் தானே உணரக்கூடியதும் இதுவேயாகும். இது பேரறிவுக்குட்பட்டது.

"புண்ணியப்பூ பூத்தது, பூமணம் மணத்தது,
குணக்குறை ஒளிந்தது, மனச் சேட்டை மடிந்தது,
சித்தம் தெளிநதது, அறிவு பெருகியது,
மதி நிலைத்தது, பிறவியில்லா இடந்தன்னில்"

என்றதில் சித்தம் தெளிந்தது என்று சொல்லப்பட்ட ஸ்தான மிதுவேயாகும். மனிதருக்கு ஆசை உண்டாக்குவதும் அதிக அவாவை உற்பத்தி ஆக்குவதும் தன் தகுதிக்கு மேல் சம்பாதிக்க வைப்பதும் மனதாகும்.

9 மனதினுடைய ஸ்தானம் நெஞ்சிலுள்ள ஹிருதயமாகும். அதனுல்தான் ஒரு சமயத்தில்,

"ஒரு கண் திறந்தது, இரு கண் சிரித்தது,
இக்கண் குளிர்ந்தது, ஹிருதயக் கண் மகிழ்ந்தது,
அறிவுக்கண் அறிந்தது மூலக்கண்ணின் மூலப்
பொருளால்"

என்றதில் இருதயக்கண் மகிழ்ந்தது என்று சொல்லியுள்ளேன்.

Koviloor Digital Library

10. இந்த மனதை அடக்கும் ஸ்தானமும் ஆசையை அளவாக நிதானிக்கும் ஸ்தானமும் நெற்றியாகும். ஒரு மனிதன் எவ்வளவு ஆசாபாசத்தில் உள்ளவனுக இருந்தாலும், நெஞ்சில் உள்ள ஹிருதயத்தில் நின்று நெற்றிக்கண்ணை நினைத்தானுனல் அவனுடைய ஆசாபாசங்களின் அளவை நிர்ணயித்துக்கொள்வான். ஒரு மனிதன் பெரும் பெருமைக்கும், பெருந்தன்மைக்கும் உரியவனுக வேண்டுமென்ருல் நெற்றியில் வெறும் ஞாபகத்தை வைத்திருந்தால் தானுகவே உண்டாகிவிடும். இவனெரு அறிவாளியாவான்.

11. இந்த இடத்தை வணங்காதவர்கள் யாருமேயில்லை. இந்த இடத்தை வணங்குகின்ருேமென்றே அவரவர்களுக்குத் தெரியாமலேயே சலாமென்றும், வந்தனமென்றும், நமஸ்காரமென்றும், கும்பிடுகிறேனென்றும் சொல்லியும், பொட்டிட்டும், விபூதி அணிந்தும், நாமம் இட்டும் அவரவர்களுடைய மத ஆசாரங்களுக்குத் தக்கபடி அவரவருடைய கையையும் சைக்கினையையும் நோக்கங்களையும் 'அங்கேயே சைகைகளைக் காட்டி, நோக்கங்களை நோக்கிக் கொள்ளுகின்றனர். பெரும் இராஜாங்கத் தன்மையும் அங்கேயே. தடுக்க முடியாத வீரக்கோபம் பிறப்பதும் அங்கிருந்தே.

12. ஒரு மனிதனுக்கு திரேகத்தில் சூடு இல்லாமல் போனுல் முன் சொன்னபடி நெற்றிக்கண்ணை ஞபாகத்தில் நினைத்தால் சூட்டை உற்பத்தி செய்து கொள்ளலாம்.

13. இந்த இடத்திலிருந்து பிறக்கும் சொற்கள் சமீப காலத்தில் பலித்தே தீரும்.

14. ஆகையால் மெய்யுணர்வாளர்களே! இந்த இடத்திலிருந்து ஒருவனை நிந்தித்துவிடாதீர்களென்றும், துற்குணமுடையவனையும் கூட இந்த ஸ்தானத்தி

Koviloor Digital Library

லிருந்து துற்குணமுடையவனென்று நினைத்துவிடாதீர்களென்றும் நான் உங்களுக்கு அடிக்கடி சொல்வது ஞாபகம் இருக்கலாம், எப்பேர்ப்பட்ட பொல்லாதவனையும் அவன் நல்லவனாக வேண்டுமென்று அந்த இடத்திலிருந்து நினைத்தீர்களானால் அவன் அக்ஷணமோ மறு சமீப சமயத்திலோ நல்லவனாகியே தீருவான் என்பது நிச்சயம். ஆகையால்தான் இந்த ஸ்தானத்திற்கு ஆக்கினை ஸ்தானமென்று பெயர்.

15. இதுவே ஆணவமழிந்த ஆணவமுடையவர்களின் ஸ்தானமாகும். இந்த ஸ்தானத்தை நல்ல நினைப்புகளுக்கு உபயோகித்துக்கொள்ளுங்கள்.

16. உலகில் பலர் பலவிதமாகச் சொல்லுவார்கள். அனுபவமில்லாச் சொற்களை ஆதரிப்பதைவிட அனுபவமுள்ள சொற்களை ஆதரிப்பது உங்களுடைய மோக்ஷத்திற்கு சாதகமாகும்.

17. உலக நல்லடியார்களே! பேரறிவு வேறு, அறிவு வேறு, சித்தமென்னும் புத்தி வேறு, மனது வேறு, குணங்கள் வேறு. ஆகையால் குணங்களிருப்பது நரம்பு நாடிகளில், மனது இருப்பது ஹ்ருதய கமலத்தில், சித்தமென்னும் புத்தி இருப்பது நெற்றி ஸ்தானத்திலாகும், பேரறிவோ உச்சியை ஸ்தானமாகக் கொண்டுள்ளது.

18. குணத்தை அடக்க ஹிருதய கமலத்திலும் மனதை அடக்க நெற்றியிலும் ஞாபகத்தை நிறுத்த வேண்டும். நெற்றியைக்கடந்து ஞானமடைந்தோர் பேரறிவுப் பெருக்கம் பெறும் உச்சியிலாகும். இது ஒவ்வொருவருக்கும் ஞாபகத்திலிருந்து வரவேண்டியது. மேற்கண்ட விஷயங்களிலும் பிடரிக்கண் உச்கிக் கண்ணில் நின்று அனுபோக அறிவால் முடித்தவர்களின் பெயர் நாமங்கள்தான் இன்று எல்லோராலும் கொண்டாடப்படும் பொது ஸ்தலங்களும் கோவில்களும் சின்னங்களும் பெரும் வைபவங்களுமாகும்.

Koviloor Digital Library

19. ஏன் இவர்களைக் கொண்டாட வேண்டும்? தன்னை அறிந்து அறிவில் குறையின்றி ஆனந்தமாக அனுபவித்து தன் நிலையடைந்ததால்.

20. இவ்வனுபவமே இன்று நம் மெய்யுணர்வாளர்களுக்கு உண்மை, ஊக்கம், உறுதி, கரு, ஒன்றுபட்டு உணர்வாக இருந்துவருகிறது.

21. உங்களின் உறுதியைப்பற்றி மிகச்சந்தோஷம் உணர்வில் ஞாபகமிருந்து வரட்டும்.

22. உறுதியிலேயே உறுதியாய் உள்ளவர்கள் யாரோ இவ்வுலகில் அவர்களெல்லோரும் நம்மினத்தில் வந்து சேர்ந்து கொள்வர்.

23. மெய்யுணர்வாளர்களே! நீங்கள் அடிக்கடி ஒன்று கூடுவதில் என் ஹிருதயம் மிக மிக சந்தோஷமடைகிறது. நன்மையின் நன்னோக்க ஏக்கம் நாளுக்கு நாளதிகமாக்கிக் கொள்ளுங்கள். எல்லாக் காரியங்களும் நன்மையாகவே முடியும்.

பிடரிக்கண்.

24. இது பின்பக்கத்து மூளையின் நடு ஸ்தானமாகும். இந்த ஸ்தானம் எல்லாருடைய சரீரத்திலும் இருக்கிறது என்றாலும், அந்த ஸ்தானத்தைக் கண்டு அனுபவிக்கும் ஞானிகளுக்கே உரியது. இந்தக்கண் மிக நுட்பமான கூச்சமுடையது. இது கூசக்கூச மிக இன்பமும், அறிவின் நுட்பங்களும், அதிலிருந்து அறிவிற்கு நன்றாய் விளங்கும். இது பெரும் மகத்துவமான அணுக்கள் கூடிய ஸ்தானமாகும்.

25. மனிதர்களுக்கு தூக்கம் வருங்காலத்தில் அறிவானது இந்த ஸ்தானத்திற்கு இரண்டங்குலத்திற்குக் கீழ் ஒடுங்குகிறது. அதாவது அறிவின் ஓய்வே நித்திரையாகும்.

26. பிடரிக்கண்ணில் தன் சக்தியை நிறுத்திப் பார்க்க ஞானிகளால்தான் முடியும். இதிலேயே அதிக

Koviloor Digital Library

கால அனுபவமானுல்தான் அவர்களுடைய அறிவின் பந்தம் அறிவிற்குத் தெரிந்து விடுபடுகிறது.

27. இந்தக் கண்ணின் கூச்சம் அதிகமாக ஆக அறிவின் வளர்ச்சியும், ஆத்ம சக்தியும் விருத்தியாகின்றது. இந்தக் கண்ணின் கூச்சம் அதிகமாக ஆக ஒரு மிளகுப் பிரமாணம் திரண்டிருக்கும். அதனுல் ஏற்படும் வெப்பமானது ஒரு கெஜ சுற்றளவு சிறு பிரகாச வட்டமாய் அறிவிற்குத் தெரியவரும். இந்த வெப்பத்தின் பிம்பமே சோம வட்டமாகும்.

28. முத்தியின் மோட்ச ரிக்கார்டுகள் அங்கேயே அடங்கியுள்ளன. ஆதலால் அறிவிற் சிறந்தவர்களே! இதனை அறிய முற்படுங்கள். இதனை அறிய துரிதப் படுவது மிக நல்லது. இந்தக் கண்ணின்மூலம் தச நாதங்களைக் கேட்கலாம். இதன் விபரங்களை ஒரு மொழியில் பார்க்கவும்.

29. மெய்யுணர்வாளர்களே! நீங்கள் எப்பொழுதும் எந்தக் காரியத்திலும் சந்தோஷமாய் இருக்க வேண்டியது. நீங்கள் சந்தோஷமாக இருந்தால் வியாதியுமில்லை, மருந்தும் தேவையில்லை.

30. உலகத்தை ஆளக்கூடிய சக்தி அரூபத்திலிருந்தபோதிலும் இச்சபையோரிடம் அது மெய்யுணர்வாய், சொந்தமாய் இருந்துவருகிறது.

31. நீங்கள் யாதொன்றுக்கும் அஞ்சவேண்டாம். நடந்ததெல்லாம் நன்மைக்கே. பின் ஆலோசித்துப் பார்த்தீர்களானுல் அதுவும் ஒரு பெரும் நன்மையாகவே முடியும். இதுவரை நடந்துவந்த காரியங்களுக்கும் நாமே. நடக்கும் காரியங்களுக்கும் நாமே, நடக்கப்போகின்ற பெரும் ஐக்கிய பதவிக்கும் நாமே நாம்.

32. நாயகன், நாயகன் செயலென்று சொல்லி நழுவ விடாமல், நல்லறிவாய் நாட்டம் கொண்டீர்களானுல் நல்ல இடத்தில் நாயகனும் நாமும் ஒன்றே.

Koviloor Digital Library

33. குற்றமுடைய குணங்களை நீங்களே சேர்த்துக்கொண்டு குறையில்லா சக்தியின் பேரில் குறை சொல்லாதீர்கள். பொருளுடையவர்கள் இவ்வுலகத்தில் திருடர்களுக்குப் பயப்படுவதுபோல் அருளுடையவர்களாகிய நீங்கள் குறையுள்ள குணங்களுக்கு இடம் தராதீர்கள். தரவும் மாட்டீர்கள்.

34. மூட்டைப் பூச்சியினுடைய இரத்தம் கடுமையான ஜன்னியைப் போக்குமானாலும், அதன் வாடையும் சேஷ்டையும் அதிக கெட்டது. ஆகையால் உலகத்தில் அநேக குணங்கள் உள்ளன. அந்த குணங்களுக் குரியவர்கள் அநேகராவர். அவர்களை நீங்கள் குறை சொல்லாமல் அவர்களிடத்தில் உள்ள நல்ல குணங்களை மட்டும் கிரஹித்துக்கொள்ளுங்கள். கடலிலுள்ள மீனானது கடல் உப்பில் சாராததுபோல் உலகத்திலுள்ள நல்லடியார்களாகிய நீங்கள் உலகத்திலுள்ள ஆசாபாசங்களில் சாரவே மாட்டீர்கள். ஒரு சிறு பெரும் ஆக்கினையால் இந்த அரசாங்கம் நடந்து வருகிறது. நாம் நமது மெய்யுணர்வின் சக்தியை நமது சிம்மாசனத்தில் வைத்து நமது குணத்தை ஆண்டு வருகிறோம்.

நெருப்பாறும் மயிர்ப்பாலமும்

35. இது மனித சரீரத்தில் 12 அங்குலம் முதல் 18 அங்குலம் வரை உள்ளது. இது வில்லைப்போல் வளைந்துள்ளது. வாளினும் வெகு கூர்மையுள்ளது. ஒரு ரோமத்திலும் எத்தனையோ பங்கு சிறியதாயுள்ளது. மிக நுட்பத்திலும் பெரும் நுட்பமான பிரகாச அணுக்கள் கோர்வையாய் இணைந்துள்ளது. இதைக் கடந்து சென்ற அறிவிற்குத்தான் இதன் விபரம் தெரியும். இதனுடைய அழகு அதிக போற்றுதலுக்குரியது. இந்த மயிர்ப் பாலத்தில் செல்ல, கருவுடன் நினைவுங் கலந்த அறிவால்தான் முடியும். அறிவை மதி என்றும் சொல்லலாம். அறிவிற்கும் கடந்த நினைப்பு

Koviloor Digital Library

2383
R65

அ:திக சூடாய் உள்ளது. அந்த சூட்டைத்தான் மூலக் கனலென்று சொல்வது. இந்த நெருப்பைத்தான் மதி யைக்கொண்டு விதியை வென்றீர்களென்று நமது பேரொளி வில் சொல்லியிருக்கிறோம்.

KOVILOOR MADALAYAM
KOVILUR-630 307
MANAGIRI VIA

36. இதனுடைய பிரகாசம் அறிவிற்கு நன்றாய் விளங்கும். பதினாறு வயதிற்கு மேற்பட்டு தற்கொலை யின்றி சாகக் கூடியவர்கள் எல்லோரும் இந்தப் பாலத்தைத் தாண்டித்தான் இறக்கிறார்கள். இதன் விபரத்தை நமது பரஞ்ஜோதியில் பார்க்கவும். மதியால் விதியென்ற கரு மயிர்ப் பாலத்தைக் கடக்கும் வரை யிலும் மரண அவஸ்தையுண்டு. பாலத்தைத் தாண்டிய பின் பேரானந்தமாகிய தெளிவு ஏற்படுகிறது. இந்த தெளிவு ஏற்பட்டபின்தான், விந்தாயுள்ள கரு ஸ்கலித மானவுடன் அறிவும் சூக்குமமும் பிரிந்து கொள் கிறது. இதுவே மரண மெனப்படும்.

37. அறிவோடு இருக்கும் மக்கள் தங்கள் ஸ்தூ லம் நல்ல நிலைமையிலிருக்கும்பொழுதே இந்த பாலத் தைத் தாண்டப் பழகிக்கொள்ள வேண்டுமென்ற நோக்கமே ஞானத்தின் பெரும் நோக்கமாகும். இதில் சதா இருக்கக் கூடியவர்களுக்குத்தான் ஞானிக ளென்று பெயர். இதைக் கடினமென்று பலரும் பல நூல்களும் முறையிட்டிருக்கின்றன. அந்நூல்களும் அவர்களுடைய சொற்களுமே உங்களுடைய மனதை கடினப்படுத்தி வைத்திருக்கிறதே யொழிய அதில் சென்று அனுபவித்ததின்பின் அது மிக எளிதாயுள் ளது என்பது தெரியவரும். ஆகையால ஒவ்வொரு வரும் தன் மனதையும் அறிவையும் பாழ்படுத்தி விடாதபடி அதை அறிய முற்படுங்கள்.

38. மெய்யுணர்வாளர்களே! உங்களின் வியர் வை நீரில் உண்டான மூட்டைபூசிக்கு எவ்வளவு தந் திரமும் சேஷ்டையு மிருக்கிறதோ, அதேபோல் உங் களின் மாய்கையினா லுண்டான மனதின் சேஷ்டை யும் அநேகமுண்டு. அதை யடக்குவதற்குரிய தெளி

Koviloor Digital Library

வான தவமும் தன் அறிவின் சாமர்த்திய பெருக்கமும் கிடைத்திருக்கிறது. ஆகையால் உங்களின் தைரியத்தால் சாமர்த்தியத்துடன் அறிந்து அறிந்து தெளிந்து கொள்ளுங்கள்.

உச்சிக்கண்

தென் நாடும் வட நாடும் கண்ணிடைநடு நாடும்,
கிழ்மூல நாடும், அறிவமுத நாடும், கூடிக்குலாவும்
நந்நாடு அந்நாடு என் நாடு சென்னி நாடே.

39. மெய்யுணர்வாளர்களே! உச்சிக்கண், நெற்றி பிடரி இருகாதுகளுக்கும் நேர்மத்தி மேலுள்ளது. இந்தக் கண் கடைசிக் கண்ணாகும். எல்லோரும் அவரவர்களுக்குத் தெரியாமலும் தெரிந்தும், இந்தக் கண்ணை நாடிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் நெற்றிக்கண் திறந்தபின் தான் இந்தக்கண் திறந்து காணமுடியும். நெற்றிக்கண் திறந்து செல்லும் பாதையானது ஒரு தாண்டிமுள்போல் வளைந்துள்ளது. இக் கண் வெகுகாலம் யோகங்கள் செய்வதாலும் தங்களுக்குத் தெரியாமலேயே திறந்துகொள்வதும் உண்டு அப்படி அசந்தர்ப்பமாய்த் திறந்துகொண்டால் திறப்பற்குரிய பொருள் அவ்விடமே விளைந்து தலைப்பாரம் பொறுக்க முடியாமல் சிரசு வெடித்து விடுவதுமுண்டு. அப்படி இல்லாவிடில் கண்களின் மூலமாகவோ காதுகளின் மூலமாகவோ வெளிப்பட்டு சரீரத்தை போட்டு விடும்படியான நிலைமையும் ஏற்படலாம் அவ்விடத்தில் ஏறிய பொருளின் விளைவும் வல்லமையும் குறைந்திருந்தால் அறிவை மயக்கி அறிவீனர்களாய் ஒரே நிலையில் வைத்து விடுவதுமுண்டு. மேற்படி நிலையடைந்தோர்களுக்கு நன்மை, தீமை என்பதையும் அறியமுடியாமல் அறிவின் வளர்ச்சி தடைப்பட்டு வெகுகாலம் இருந்துவிடுகிறார்கள். இவர்களையும் உலக மக்கள் ஞானிகளென்றே சொல்லுவார்கள். இவர்களும் இவர்களின் குருவும் சரியான பாதைகளில் சென்று வழி காணாதவர்

Koviloor Digital Library

கள் ஆவார்கள். இவர்களுக்கும் பிறவியுண்டு. இதிலும் எத்தனையோ பேரில் ஒருவர், தன் அறிவின் உழைப்பால், விழிப்பால், அறிந்து சரியான முத்தி நிலை அடைவதுமுண்டு.

40. இச்சபையோர்கள் எந்தச் சுமையையும் எப்போதும் தலையில் சுமக்கக்கூடாது. தோளில் சுமந்து செல்லலாம்.

வலம்புரிச்சுற்று

41. நெற்றிக்கண் திறந்து உச்சிக்கண் சென்று இருக்கும் பழக்கமுடையவர்களுக்கு வலம்புரிச்சுற்று மிக தெளிவாய் தங்கள் அறிவிற்கு உணர்வினுள் உணர்ச்சியாய் தெரியவரும். இந்த வலம்புரிச்சுற்றினால் அறிவினுடைய அளவும் முடிவும் தெரியும். இந்த வலம்புரிச்சுற்று அதிகரிக்க அதிகரிக்க சுற்றின் வேகத்தால் அறிவிற்கு அப்பாற்பட்ட விஷயங்களை அறிந்து முடிக்கலாம். இந்தச் சுற்று அதிகரிக்க அதிகரிக்க குளிர்ந்த ஆனந்தப் பூரிப்பு உண்டாகும். இந்த பூரிப்பால்தான் ஒரு கண் திறந்தது என்று சொல்லியிருக்கிறேன். இந்த சுற்றால் உண்டாகும் இன்பம் வரையறையற்றதாகும். இந்த சுற்றின் அதிகரிப்பால் தவப்பற்றுதலும், அன்பு, பொறுமை பெருந்தன்மை பேரறிவு தானாகவே வளரும். இந்த சுற்றால்தான் ரசமணி திரள்வதும் ஆறாதாரங்களென்ற திரைகளாகய ஐவ்வுகள் கிழிவதும் ஆகும். இந்த சுழலில் அனுபவமுள்ளவர்கள் எந்த பற்றுதல்களிலும் பற்றற்ற நிலையிலிருப்பர்.

கடத்திலோர் இடத்தில் கரந்த ஞானப்பாலை
கனலான மூலக்கனலால் மூட்டி மூட்டி
கம்ப நுனிவழியாய் கண்மூக்கு மத்திபத்தில் ஊட்டி ஊட்டி
கருத்திற் கிசைந்த சுவையை கபாலம் ஏற்றி ஏற்றி
தண்மணிபோல் ரசமணி திரள திரள
கண்ணுக்கு தெரியா திரையாறும் தன் திறமையால்
தன் காரணத்தை தானே தெரியலாமே. [திறக்க திறக்க,

Koviloor Digital Library

42. இந்த சுற்று சுற்றும் விபரம் ஒரு பெரிய மெயின் தண்ணீர் குழாயில் தண்ணீர் வேகமாய் ஓடிக் கொண்டிருக்கும்போது குழாயின் பேரில் ஒரு பொடி ஊசித்துவாரம் ஏற்பட்டு அதன் வழியாக தண்ணீர் எப்படி பீரிடுமோ அதே போன்று அளவுடையது. அது ஒரு கெஜம் வரை சுற்றுவது சுழலாக விளங்கும். இந்த சுற்றின் சுழல் பரவிச் சுழல பெரும் இன்பம் உண்டாகும். இது நெற்றி, உச்சி, பிடரி இங்கெல்லாம் மிகச் சுகமான பூங்காற்று சுழன்று அடிக்கும்.

43, நல்ல இராகம், சப்தம், பிடில், வீணை, புல்லாங்குழல், மோர்சிங் இவைகளின் தொனிகளை சிறு தூரங்களிலிருந்து கிரஹிக்கும்பக்ஷத்தில் இந்த சுற்று தெளிவாக விளங்கும், படுத்திருந்தாலும் இந்த சப்தத்தை சுழல் தானே வாங்கிக் கொண்டு சுழலுவது மெய்யுணர்வாளர்களுக்கு நன்ருகத் தெரியும். மற்றொரு வகையில் எப்படி என்ருல், சிறு சூருவளிக் காற்றைப் பார்த்திருந்தீர்களானுல் அதைப்போன்றும் உதாரணம் சொல்லலாம். ஸீசன் காலங்களில் சிறு பனிச்சாரல் அடிக்கும்போது தம் முகங்களில் எப்படி உணர்ச்சி உண்டோ அதேபோல் சிற்சில சமயங்களில் தெரியவரும். சரீரம் நிமிர்ந்திருப்பதுடன் சரீர சதைகளை தளரவிட்டு மெதுவாய் மிக நுட்பமாய் கவனிக்கவேண்டும். உதாரணம் ஒரு மெல்லிய கடுதாசியை தண்ணீரில் நனையவைத்து அதை மெதுவாய் இழிப்பதுபோன்று கவனிக்கவும். நித்திரையின்றி நாம் படுத்திருக்கும்போது தண்ணீரில் நனைந்து வந்த நல்லபாம்பு நம் வயிற்றின் மேல் சுழன்று படுத்துக் கொண்டால் எப்படி நெளிநெளிப்பும், கனமும் குளிர்ச்சியும் உணர்ச்சியில் தட்டுமோ அதைப் போன்று சுத்தி செய்த இடத்தில் சுழன்று சுற்றுவது தெரியவரும்.

44. இந்தச் சுற்றை இணைவைத்துத்தான் பெரும் சமாதிகளையும் கோவில்களையும் வலமாக

Koviloor Digital Library

சுற்றிவருவதும் மற்ற வைபவங்களெல்லாம் வலம் புரியாகவே சுற்றுவதுமியற்கை; மற்ற எல்லா இயந்திரங்களும் ஓடும் சக்கரங்களும் வலம்புரியாகவே சுற்றுகின்றன.

45. அதிக புளிப்பு, உரப்பு ஆகாரங்களிருந்தாலும் அளவுக்கு மீறி போகமிருந்தாலும் இதற்குத் தடை ஏற்படும். சுவையான தித்திப்பும் சத்தான ஆகாரமும் நல்ல வாசனைகளும் இதற்கு மிக மிக உற்சாகம் அளிக்கும்.

46. ஆகையால் மெய்யுணர்வாளர்களே! அடிமூலத்திலுள்ள பொருள் அறியாதபோது அடியேன் என்பது தகும். அடிமூலத்தில் உள்ள பொருள் அம்பலத்தில் ஏறி அப்பொருள் மெய்யுணர்வாய் இருப்பதால் அடியேன் என்று இனி எழுதவோ, பேசவோ வேண்டாம். அநேகம் பிறவிகளில் ஊழியம் செய்து செய்து, தேடிய மெய்ப்பொருள் கிடைத்து அப்பொருளே மெய்யுணர்வாய் இருப்பதால் ஊழியனென்றும் இனி எழுதவும், பேசவும் வேண்டாம்.

47. உலகத்தில் எல்லோரையும் ஒரே கொள்கையாளராக்க முற்படுவதும், எல்லோரையும் சீர்திருத்தம் செய்யவேண்டுமென்று நினைப்பதும், எதைப்போன்று என்றால் பெரும் நெருப்பை தன் கண்ணீரால் அணைக்க முற்படுவதுபோன்று. ஆகையால் மற்ற குணங்களை குறையாகவோ துவேஷமாகவோ நினைத்தல் கூடாது.

உயிர் உலாவும் இடங்கள்.

48. அடிமூலம், ஹிருதயகமலம், பிடரிக்கண், நெற்றிக்கண், மூளையின் அடிப்பாகம் இவ்வைந்து இடங்களாகும். ஒருவருக்கு சாந்தம் உண்டாகவேண்டுமென்றால் கண்பட்டையை கீழே நோக்கி மூக்கு முனையில் பார்வை வைத்தால், உடனே சாந்தமுண்டாகும்.

Koviloor Digital Library

வலம்புரி சுற்ருல் கண்களுக்குண்டாகும் நன்மைகள்

49. கண்ணையுமறிந்தேன், அறிந்தீர்; கண்ணினுள்ள காரண தேவநிலையும் அறிந்தேன், அறிந்தீர்; காரணத்தையும் அறிந்து, காரணத்தையும் கடந்த பரமானந்தத்தையும் அடைந்து மொழிந்தேன், மொழிகின்றேன், இவ்வுலகத்திற்கும் எவ்வுலகத்திற்குமே.

50. வலம்புரி சுற்ருல் கண்கள் இரண்டும் குளிர்ந்திருக்கும். கண்ணுக்குளுள்ள கரும்புள்ளிக்கும் நடுவேயுள்ள சிறு புள்ளிகள் இரண்டிலும் (வஸ்து என்று சொல்லப்படும் வஸ்துவில்) சிறு பூங்காற்று மிக மிக சுகத்துடன் வலம்புரியாய் சுழன்று அடிப்பதுடன் ஒரு பொடி ஊசி சுற்றிக் குடைவதுபோல் நன்ருகத் தெரியவரும். அதனுல் கருணை மிக உண்டாகும். ஆகையால்தான் இக்கண் குளிர்ந்தது என்று சொல்லப்பட்டது.

51. கண்கள் ஏகாக்ர சக்தியை வாங்கக்கூடிய உப கருவியாகும். ஆகையால் கண்களை ஒவ்வொருவரும் பாதுகாத்துக் கொள்வது மிக உத்தமம். இதெல்லாம் மூலக்கண்ணின் மூலப்பொருளால் ஆக வேண்டியது.

52. மூலக்கண்ணின் மூலப்பொருளைக்கொண்டு ஞானக் கண்ணைத் திறக்கப்பட்ட மெய்யுணர்வாளர்களுடைய செய்கை இதுவாகும்.

53. ஞானத்திலும் போகத்திலும் விழித்திருந்தால் விந்து கசியாது. ஆனல் நிதானமாய் இருக்க வேண்டும்.

54. கண்ணே, நெற்றியோ விந்துவின் ஸ்தானமாகாது. கண்களை இமையாதபடி கண்களிலிருந்து நெற்றியைக்கவனித்தால் மிக திடசித்தம் உண்டாவதுடன், தன் வியாதி யாவையும் போக்கும். 5 முதல் 20 நிமிஷங்

Koviloor Digital Library

M. P. P. Annamalai, PALLATHUR, RAMNAD DT.

கள் வரை பழகி நாளடைவில் கூட்டிக்கொள்ள வேண்டும். இச் சபையில் சேராதவர்கள் ஐந்து நிமிஷங்களுக்கு மேல் கவனிக்கக்கூடாது.

55. கண்களாலும் மெய்யுணர்வாளர்கள் தவத்தை அதிகரித்துக்கொள்ளலாம். குளிர்ந்த காற்றுள்ள இடங்களிலும், எரிச்சலில்லா வெளிச்சமுள்ள இடங்களிலும், காலை மாலை நேரங்களிலும், நிலாக் காலங்களிலும் இதன் அபிவிருத்தி அதிகமுண்டாகும்.

56. கண்களிலுள்ள கரும்புள்ளிகள் குழந்தை பிறந்த தேதியில் இருந்த அளவு கூடுவதுமில்லை குறைவதுமில்லை க்ண்களுக்கு நிழல் கிடையாது. ஒருவரிடம் பேசும்போதோ ஒருவர் பேச்சைக் கேட்கும்போதோ கண் இமையாதபடி இருந்துகொள்ள வேண்டியது. புகையுள்ள இடங்களிலும், நெருப்பின் வெப்பத்திலும், துர்நாற்றம் உள்ள இடங்களிலும், சரியான வெய்யிலிலும் கண்களை அதிகமாக விழித்துக்கொண்டிராமல் கண்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டியது.

57. கண்களால் மனோவசிய சக்தியும் சிற்சில சித்துகளையும் செய்து முடிப்பர். ஆனால் இச்சபையோர்கள் இது வகைகளில் முற்படக்கூடாது.

58. மெய்யுணர்வாளர்களே! உங்கள் மனதிலுள்ள ஜாதி மத துவேஷங்களை நீக்கினீர்கள். எல்லா ஆத்மாக்களுக்கும் ஜீவனுயிருக்கும் ஜீவனுடைய பதவி ஒன்றே என்றறிந்தீர்கள். அவரவர்கள் கொண்டுள்ள தவமும், வைராக்கியமும் அவரவர்களின் மனதிலுள்ள மாசுகளை நீக்கிக்கொள்ளுவதற்கும், தான் எடுத்த பிறவியை அறிவோடு முடிப்பதற்குமாகவே.

59. அவரவருடைய வைராக்கியத்துடன் தவம் பக்குவமடைந்தால் அணுக்களிலுள்ள அழுக்கை நீக்கி

Koviloor Digital Library

அவரவருடைய பிறவியை முடித்து ஐக்கியமடைவார்கள். அதுவே மோக்ஷம், முத்தி எனப்படும்.

60. மெய்யுணர்வாளர்களே! நீங்கள் யாதொரு மனக்குறைவில்லாமலும் குறையாத செல்வத்திலிருந்து அதில் சாராத குணத்துடன் தன்னிலை தவத்தின் செல்வத்தால் பூரணம் பொருந்தி, புகழோங்கி, புகழ்பெறும் ஐக்கியமாவீர்கள் என்பது நிச்சயம்.

61. எமது தைரியசாலிகளே! நீங்கள் மிக தைரிய முடையவர்கள். எப்போதும் தைரியமாயிருத்தல் வேண்டும். அத்துடன் இந்த உலகத்தோடு ஒட்டி வாழ்வதில் மிக மிக நன்மைகள் உண்டு. பல சந்தர்ப்ப வித்தியாசத்தால் தன் வீட்டிலாவது, தெரிந்தவர், இனத்தார் வீட்டிலாவது, சிற்சில நோய்கள் வருங்காலத்தில் முதலில் செய்யவேண்டிய முறை என்னவென்றால் நீங்கள் சந்தோஷ முகச் செழிப்புடனும், தைரியத்துடனும் இருப்பதுடன், வீட்டிலுள்ளவர்களிடத்திலும், நோயாளியிடத்திலும், மற்ற சுற்றத்தாரிடத்திலும் சந்தோஷத்துடன் தைரியமாய் பேச வேண்டும். அத்துடன் எந்த வகையில் தைரியத்தை ஊட்டவேண்டுமோ அந்த வகையில் ஊட்டிவிட வேண்டும். அப்படி செய்துகொள்வதில் பெரும் நன்மை உண்டு. எப்படி நன்மை உண்டு என்றால், உங்கள் மனதும் சுற்றத்தாருடைய மனதும் தைரியத்தில் இருப்பதால் இருதயத்தில் உள்ள இரத்தம் சுத்தமாய் சுழல்கிறது. அப்படி சுழல்வதால் தைரியத்தின் ஞாபகத்தால் வியாதியஸ்தர்களிடம் தைரிய சக்தி அணுக்கள் நுழைந்து அவர் மனதை தைரியபடுத்தி சந்தோஷமாக்கும். அத்துடன் அதற்குரிய பக்குவ முறை செய்துவந்தால் போதும். முக்கியமான தைரியத்தின் பாகம் இரத்த அணுக்களுக்கு உரியது. இந்த அணுக்கள் சரிவர இருந்தால் எப்பேர்ப்பட்ட வியாதியும் நீங்கும்.

Koviloor Digital Library

62. வயது அதிகமாகி நமது சபையில் சேராதவர்களா யிருந்தாலும் தைரியத்துடன் இருந்து சரீரத்தை விட்டு ஆத்மா விலகி விட்டாலும் அவர்களுக்கும் பெரும் நன்மை உண்டு. தைரியத்தின் வேகத்தால் ஆத்மா சூக்கும லோகத்தில் சென்று சுகத்துடன் தன் மறதியிலிருந்து தைரியத்துடனும் மீண்டும் சுறு சுறுப்புடன் இவ்வுலகத்தில் பிறந்து வருங்காலத்தில் நன்மைக்குரியவர்களாய் வருவார்கள் என்பது நிச்சயம்.

63. உங்களுடைய சரீரம் சுலபமாய் கிடைத்ததல்ல. எவ்வளவோ காலம் எடுத்துக்கொண்ட பிரயாசையால் கிடைக்கப்பெற்றது. அதனுல்தான் சுமார் ஆயிர வருடம் இந்த ஸ்தூலத்தில் இருந்து அனுபவித்தாலும் சரீரத்தைவிட, யாருக்கும் சம்மதிக்கவே சம்மதிக்காது. அதைப்போன்றே உங்களுக்குக் கிடைத்திருக்கும் சத்திய மெய்யுணர்வும் எவ்வளவோ பிறவிகளால் முயற்சி எடுத்து கிடைக்கப்பெற்றுள்ளது. எந்த வேலையிலிருந்தாலும் சத்தியம் மெய்யுணர்வை பாதுகாத்துக்கொள்ளும், உணர்வை நீங்கள் பாதுகாத்துக் கொள்ளுங்கள். உங்களின் அவாவை முடிக்கும் வரையிலும் உயிருக்கு டயமே இல்லை. மெய்யுணர்வு அதிகம் ஆக ஆக எல்லா விபரமும் தெரிவதுடன் முன் உள்ள பிறவியும் உங்களுக்குத் தெரியவரும். எந்த வியாதியஸ்தர்களுக்கும் தங்கள் வியாதி தங்களைக் கொன்றுவிடும் என்ற பயமே வேண்டாம். தன் குற்றத்தாலும் சந்தர்ப்ப வித்தியாசத்தாலும் வியாதிக்குக் காரணம் தானேதான். ஆனுல் சத்திய மெய்யுணர்வு இருந்து வந்தால் தன்னுல் வந்த வியாதி தானே போகும் என்பது நிச்சயம்.

ஆகையால் பெரும் சந்தோஷத்துடன் இன்றைய பிரசங்கம் இனிது முடிவுற்றது.

Koviloor Digital Library

ராகம் வராளி   தாளம் ஆதி

பல்லவி

ஆனந்தமே நமக்கு   ஆனந்தமே
அறியாத நிலைதனை அடைந்ததினால்   —   என்றும்

சரணம்

தன்னை அறிவதற்கு தாரணியெல்லாம், சுற்றி
தன்னை அறிவித்திடும் தலைவனை கண்டோம். (அவர்)
நம் நிலையை நம்முடன் காட்டி விடவும், நாம்
நம் நிலையிலே யமர்ந்து நாட்டம் கொண்டோம், —என்றும்

முக்கண் திறந்திட முயற்சி செய்தோம், கருவின்
மூலக் கண்ணிலிருந்து மெள்ள ஏறினோம். நுட்பமாய்
அக்கண் திறந்திட அருகினிற் சென்றோம், திறந்து
ஆதி நிலையதனை அடைந்து விட்டோம்,   —என்றும்

உள் உணர்வால் உச்சியில் உலாவிடச் சென்றோம் —
உண்மை
உறுதி ஊக்கம் கொண்டு உயிர்நிலை கண்டோம், உச்சியில்
தெள் அமுதாம் உணர்வை திரட்டி விட்டோம்,   பிறகு
தெய்வ சபையின் உண்மை அரியலானோம். — என்றும்

பார்தனிலே பக்தரின் நிலை கடந்தோம். மத
பற்றுள்ள பக்தர்களின் நிலை அறிந்தோம், யோக
மார்க்கத்தின் முடிவான நிலை கடந்தோம், ரிஷிகள்
முனிவர்க்கும் முடிவான நிலை கடந்தோம்—என்றும்
(ஆனந்தமே)

மெய்வுணர்வாளர் அகஸ்தியர்.

2383
R65

Koviloor Digital Library

பரஞ்ஜோதி மஹான் அருளிய
"எந்நூலுக்கும் இந்நூலே மூலம்" என்ற
உயர்ஞான நூல்கள்

1. ஒருமொழி.
2. பேரறிவு.
3. பரஞ்ஜோதி.
4. ஞானக்கண்
5. ஆதியும் உலக இணைப்பும்.
6. ஆருதாரமும் அமிர்தமும்.
7. பூதலோகம்.
8. உணர்வும் தவக்கனலும்.

அச்சில் :—

1. நடந்ததெல்லாம் நன்மைக்கே.
2. சந்தோஷம்.

Koviloor Digital Library
M. P. A. C. PALLATHUR, RAMNAD DT.
HIGGINBOTHAMS CP. 271

நம் சபை புத்தகங்கள் கிடைக்குமிடம்

பரிபூரண பரஞ்சோதியின் உயர் ஞான சபை

1. 1. மேல வடம் போக்கித் தெரு, மதுரை.
2. 33, கும்மாளம்மன் கோவில் தெரு, தண்டையார் பேட்டை, சென்னை.
3. ஷை சபை, பெரம்பூர்.
4. நெ. 30. நம்மாழ்வார் செட்டித் தெரு, சூளை.
5. ஜஸானு பவான் மட்டுங்கா, பாம்பே 19.
6. கீழரத வீதி, சொக்கலிங்கபுரம், அருப்புக் கோட்டை.
7. ஷை சபை, வெள்ளக்கோட்டை, அருப்புக்கோட்டை.
8. சின்னுளப்பட்டி, மேட்டுப்பட்டி.
9. பெரியகுளம்
10. புதுச்சேரி,
11. வேலூர். N. A,
12. காஞ்சீபுரம்.
13. காக்கினடா, (ஜெகன்னாதபுரம்)
14. பரிபூரண பரஞ்ஜோதி கம்பெனி 34, கார்ப்பரேஷன் புரூட் மார்க்கெட், சைனாபஜார் ரோட், மதராஸ்.

KOVILOOR MADALAYAM
KOVILUR-630 307
MANAGIRI VIA

Printed at The Rajan Electric Press, G. T. Madras. 2-40